## தொழிற் முன்னேற்ற பாதை

# ஆப்ரேட்டர் அட்வான்ஸ்டு மிஷின் டூல்



## ஐடிஐ-யில் பயிற்றுவிக்கப்படும் திறன்கள்:

- பணிமனையில் பாதுகாப்பாக வேலை செய்யும் நடைமுறைகள் மற்றும் பணியிடத்துாய்மை
- சரியான திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல் மூலம் வரைபடத்திற்கு ஏற்ப பணிப்பொருட்களை உருவாக்கும் திறன்
- லேத், டிரில்லிங், மில்லிங் போன்ற இயந்திரங்களை இயக்கும்திறன்
- சிலிண்டரிக்கல் மற்றும் சர்பேஸ் அரவை இயந்திரத்தை இயக்கி, துல்லியமான பாகங்களை தயார் செய்தல்
- இயந்திரங்களை இயக்க பயன்படும் (cutting parameters) வெட்டும் வழிபாடு, பணிப்பொருள் மற்றும் வெட்டுளிகள் பிடிக்கும் சாதனங்கள், வெட்டுளிகள் மற்றும் அளவிடும் கருவிகள் தேர்ந்தெடுத்தல் மற்றும் பயன்படுத்தும் திறன் வளர்த்தல்
- பல்லூடகம் சார்ந்த பயிற்சி – CNC Lathe & CNC VMC இயந்திரங்கள் FANVC & SIEMENS கட்டுப்பாட்டு அமைப்பு
- பல்லூடகம் கற்பித்தல் மென்பொருள் பயன்படுத்தி CNC இயந்திரங்கள் பாகங்கள், அதன் அமைப்பு, செயல்பாடுகள் மற்றும் அச்சுகளின் பெயர்கள் கற்பித்தல்
- Interactive Part Programming மென்பொருளை பயன்படுத்தி, வரைபடத்திற்கான Part Program தயார் செய்யவும் மற்றும் தொடரியல் பிழைகள் கண்டறிந்து சரிசெய்யவும், சரியான வெட்டுக்கருவிகள் தேர்ந்தெடுக்கவும் மற்றும் Tool path சரிபாக்கும் திறன்
- மெய்நிகர் CNC simulator மென்கொருள் பயன்படுத்தி, CNC இயந்திரத்தை இயக்குவதற்கு, Program exit செய்வதற்கு மற்றும் Job setting செய்வதற்கான வழிமுறைகளை கற்பித்தல்
- மென்பொருளை பயன்படுத்தி CNC lathe & mining இயந்திரத்தை பாதுகாப்பாக இயக்கும் திறன் வளர்த்தல்
- CNC lathe & mining(VMC) இயந்திரங்களில் பணிப்பொருளை செட்டிங் செய்து, வரைபடத்திற்கேற்க பணிப்பொருளை உருவாக்கும் திறன்
- இயந்திரங்களில் ஏற்படும் இயக்க பிழைகளுக்கான காரணம் கண்டறிந்து பழுதினை நீக்கும் திறன்
- பிறரிடம் நன்றாக தகவல் தொடர்பு கொள்ளும் திறன்

## தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் திறன்கள்:

- பாதுகாப்பாக வேலை செய்யும் நடைமுறைகள், சுற்றுப்புறசூழல் ஒழுங்குமுறைகள் மற்றும் பராமரிப்பு முறைகளுக்கான திறனை அளித்தல்
- பல்வேறு பொறியியல் வரைபடங்களின் விவரக்குறிப்புகளை விளக்குதல் மற்றும் பயன்படுத்துதல்.
- வடிவியல் (Geometrical tolerance) அனுமதிக்கப்பட்ட அளவில் ஆழமான அறிவை அளித்தல்.

## ஐடிஐ முடித்தபின் என்னவாகலாம்:

### ஆரம்ப நிலை

அரை திறமையான வேலையாள், தொழில் பழகுநர்.

### இடை நிலை

முழுத்திறனுடைய வேலையாள், போர்மேன், சுய வேலைவாய்ப்பு

### மூத்த நிலை

மேலாளர், தொழில் முனைவோர்.







## ஐடிஐ முடித்தபின் வேலைவாய்ப்புகள்:

- மத்திய அரசு நிறுவனங்களான ரெயில்வேஸ், ஐ.சி.எப், எச்.வி.எப், BHEL, சிமெண்ட் தொழிற்சாலைகள், அணுமின்நிலையம், இஸ்ரோ போன்றவை
- பொறியியல் நிறுவனங்கள் மற்றும் பணிமனைகள்.
- மைக்ரோ, சிறு, நடுத்தர அளவிலான தொழில் நிறுவனங்கள்.
- சுய வேலைவாய்ப்பு, தொழில்முனைவோர்.

## ஐடிஐ முடித்தபின் என்ன படிக்கலாம்:

- தொழிற்பழகுநராக சேர்ந்து தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழை பெறுதல் (NAC).
- ஐடிஐயில் பயிற்றுநராக பணியில் சேருவதற்கு பயிற்றுநர் பயிற்சி மையத்தில் சேர்ந்து (CITS) சான்றிதழை பெறுதல்
- Lateral Entry மூலம் டிப்ளேமா முழு நேர / பகுதி நேர படிப்பில் சேரலாம்.
- டி.ஜி.டி.யின் கீழ் மேம்பட்ட டிப்ளோமா (தொழிற்கல்வி) படிப்புகள்
- என்.எஸ்.டி.ஐ நடத்தும் சி.ஏ.டி / சி.ஏ.எம் போன்ற சிறப்பு குறுகிய கால படிப்புகள்


QUEST ALLIANCE

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

Industrial Training Institute